

# அடியுங்கள் சாவுமணி

மிவாஸ்கி

சாந்தி நிலைய வெளியீடு

### உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

### Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# அடியுங்கள் சாவுமணி

ஆசிரியர் :

மிவாஸ்கி



சாந்தி நிலையம்

துறையூர் . . . . . திருச்சி ஜில்லா

சாந்தி நிலைய வெளியீடு 6.
முதல் பதிப்பு ஜூன் 1947
விலை அணா எட்டு.

## சமர்ப்பணம்

வாழ்க்கை வசதிகள் வஞ்சிக்கப்பட்டு, வாழ்விலே விரக்தியுற்றது போல் உழல்கின்ற—வாழப் பிறந்தோம், வாழ்க்கை முறையை உயர்த்துவோம் என்ற தன்னுணர்வு இன்றி வாழ்கிற—சகோதரத் தொழிலாளிகளுக்கு... தங்களைத் தாங்களே உணர்ந்து, புதுயுக உதயத்துக்கு வழிகோல விழிப்புறுவதற்காக.

ஊழியன் பிரஸ், துறையூர்.
Q. H. No. Ty. 40. C. 2000

# தோழர் மிவாஸ்கி

'கிராம ஊழியன்' மாதமிருமுறையில் மிவாஸ்கி எழுதிய உணர்ச்சிச் சித்திரங்கள் வெளிவந்தபோது, என்னிடம் பலரும் கேட்டார்கள் 'உங்களுக்கு இந்த மிவாஸ்கியின் எழுத்துக்கள் எப்படிக் கிடைத்தன? அவற்றை யார் இவ்வளவு அழகாக மொழி பெயர்க்கிறார்கள்' என்று. 'தோழர் மிவாஸ்கி ரஷ்ய நாட்டிலே உள்ளவரல்ல. தமிழரிடையே தமிழராக வாழ்கின்ற ஓர் தமிழன்தான், உழைப்பாளிகளிடையே உழைப்பாளியாக வாழ்கின்ற ஒரு எழுத்தாளன்தான்' என்று நான் அறிமுகம் செய்யவேண்டிய தவசியமாயிற்று.

என்றாலும் ரசிகர்கள் 'மிவாஸ்கியின் மொழி பெயர்ப்புக் கதைகள் மிக நன்றாக உள்ளன' என்று பாராட்டுவதைவிட மறுத்தார்கள்! தோழரின் பெயர் அவ்வித மயக்கத்தை ஏற்படுத்திவிட்டது. 'உணர்ச்சிகளையும் சொல்லையும் வைத்து விளையாடுகிறேன்' என்று கூறி புது ரகமான இலக்கிய சிருஷ்டிகளை எழுதுகிற மிவாஸ்கியின் எழுத்துக்களிலே தனி வேகமும் கொதிப்பும் உள்ளப் புழுக்கத்தின் அனல் மூச்சும், லட்சிய வெறியின் உயிர்ப்பும் மிளிர்கின்றன.

மனிதகுலச்சிறுமைகளைக் கண்டு மனம் புழுங்கி, குமுறிக் கொதிப்புற்று சமுதாயத்தின் மீது, சமுதாய முறைகள்மீது வெறுப்பும் கோபமும் கொண்டு எழுத்திலே அனல் பரய்ச்சும் தோழர் மிவாஸ்கி அரசியல் கட்சி எதனிலும் தொடர்பு இல்லாதவர்.

இலக்கிய வளர்ச்சியிலும், சமுதாய முன்னேற்றத்திலும் தீவிரப் பற்று கொண்டவர். 'கவலையற்ற நாடோடி' என்று தன்னைத்தானே அறிமுகம் செய்து கொள்வதில் மகிழ்வு கொள்பவர். புதுயுக இலக்கியத்திலே சிந்தனை, எழுத்து வலிமை, சொல்லாட்சி, உணர்ச்சிப் பிரதிபலிப்பு முதலியவற்றால் தனியான ஸ்தானம் வகுத்துக்கொண்ட ஆசிரியர்.

அவரது எழுத்தின் சிறப்பை, எண்ணங்களின் கொதி நிலையை, கருத்துக்களின் உயர்வை உணர்ச்சிகரமாக விளக்குகிறது 'அடியுங்கள் சாவுமணி'

தீவிரமான சிந்தனைச் சிருஷ்டிகளை அழகான புத்தகங்களாக்கி, புதுயுக இலக்கிய வரிசையில் முக்கிய இடம் பெற்றுவிட்ட 'சாந்தி நிலையம்' மகிழ்வுடனும் பெருமையுடனும் மிவாஸ்கியின் நூலை தமிழகத்துக்கு சமர்ப்பிக்கிறது.

சாந்தி நிலையம்
துறையூர்.

வல்லிக்கண்ணன்

# அடியுங்கள் சாவுமணி

## 1

'புதியதோர் உலகம் செய்வோம்; கெட்ட போரிடும் உலகத்தை வேருடன் சாய்ப்போம்' என்ற உறுதியுடன், உழைப்போர் போர் புரிகின்ற இந்தக் காலத்திலே... ... ...

புதுயுக உதயத்தின் பொன்கீற்று உலகவெளி யிலே வைள்ளிப்பல் காட்டிச் சிரிக்கிறது என்று பிரமாதப்படுத்துகிற இந்த நாளிலும் கூட......

சுதந்திரத்தின் ஆசார வாசலிலே நாம் நிற் கிறோம் என்று தேசபக்தர்கள் பூரித்துப்போகிற இந்த வேளையிலும் கூட......

ஒரே உலகம் என்று கனவுகண்டு, 'எல்லோரும் ஓரினம், எல்லோரும் ஓர் குலம், எல்லோரும் ஓர் நிறை' என்று பிரசாரகர்கள் முழங்கி வருகின்ற போதும் கூட... ...

அமைதி, ஆனந்தம், தனிமனித சுதந்திரம் என் றெல்லாம் ஆஞுப்படுத்தப்பட்டு வந்தாலும் கூட .........

உண்மையில், மனிதர்கள் மனிதராக வாழ உரிமையில்லை. வாழ்விலே இன்பம் இல்லை. வாழ வேண்டும் என்ற ஆசையை உண்டாக்குவதாக இல்லை வாழ்க்கைத்தரம்.

உண்மையில், அமைதி யில்லை. ஆனந்தமில்லை. உற்சாகமில்லை. உழைப்போருக்கு உரிமையில்லை, உழைத்துத் தொலைக்க வேண்டுமே என்ற கடமைக்காக முணுமுணுத்தபடி உழைப்பிலே ஈடுபடுவோர் உயர மார்க்கமில்லை.

உண்மையில் வாழ்க்கை வாழ்க்கையாகவே யில்லை வாழ்வின் நலன்கள் யாவை என உணரவே மனிதருக்குச் சந்தர்ப்பமில்லை. ஓய்வு இல்லை. வசதிகள் இல்லை. ஆகவே மனிதருள்ளங்களில் மகிழ்வு பொங்கிப் பிரவகிக்கவில்லை.

மக்களின் முகத்திலே கவலைக் கார்மேகம் கவிந்து விடுகிறது அவர்கள் உள்ளத்தை ஆக்கிரமித்திருக்கும் அந்தகார நிலையைப் படம்பிடித்துக் காட்டுவது போல.

உலக அரங்கிலே உழைப்போர் பணமும் அதிகாரமும் பெற்ற ஒரு சிலரின் கைக்கருவிகளாக ஆட்டிவைக்கப் படுகிறார்கள். பொருள் இல்லாத காரணத்தால் உழைக்க முன்வந்து, தங்களையே அடிமையாக்கி — தங்கள் உழைப்பை, உடலை, காலத்தை எல்லாம் — ஒரு சில காசுகளை எறிகின்ற முழுமோச முதலாளிக்குப் பணயம் வைத்து, முதலாளியின் பணமூட்டையை கொழுக்கச் செய்கிற சாதனங்களாகி, தங்களைப் பற்றிய எண்ணமே இன்றி உழைத்துச் சாகிறார்கள். ஏன்?

மூச்சடக்கிக் கடலினுள் ஆழ்கின்றனர் மனிதர்கள். ஆபத்துக்கும் அஞ்சாது உயிரைத் துச்சமெனக் கருதி உலோகக் கனிகளில் உழைக்கிறார்கள் ஓர் சிலர். யந்திரங்களோடு யந்திரங்களாக இயங்கி

உழைக்கின்றனர் மிகப்பலர். மனிதரை மனிதர் இழுப்பது வரை என்னென்ன தொழில்கள் உண்டோ அவ்வளவிலும் ஈடுபட்டு உழைக்கிறார்கள் பெரும்பாலோர். ஆனால் அவர்கள் 'இல்லாதவர்கள்' தான் என்றும்!

உணர்ச்சி இல்லாதவர்கள் அல்லர். பசித் துடிப்பு இல்லாதவர்கள் அல்லர். வாழவேண்டும் என்ற ஆசை இல்லாதவர்கள் அல்லர். வாழ்க்கை வசதிகள் பலவும் வேண்டும் என்ற விருப்பம் இல்லாதவர்கள் அல்லர் ஆனால், பணம் இல்லாதவர்கள்! பகட்டிமினுக்கப் பட்டும் பட்டாடைகளும், நகைகளும், பவுடர்களும் ஹேராயில்களும், கண்ணாடிகளும், டம்பாச்சாரித்தனங்களும் இல்லாதவர்கள்! அவற்றைப் பற்றிச் சிந்திக்கவே நேரம் இல்லாதவர்கள். ஓய்வு இல்லாதவர்கள். செத்துக்கொண்டே வாழ்வது தவிர வேறு வழி இல்லாதவர்கள் முழு வயிற்றுச் சாப்பாட்டுக்கும், கவலையற்ற, கடனற்ற வாழ்க்கைக்கும் வகை இல்லாதவர்கள்.

உலகத்தின் மிகப் பெரும்பாலோர் இந்நிலையிலே வாழ்கிற போது — செத்துக்கொண்டே உடல் சுமந்து திரியும் போது — அதோ பாருங்கள்......

பளபளக்கும் படிகத்துப் பாவை போன்றாளுடன் கட்டிலிலே புரள்வதற்கு முன்பாக ரத்தச் செந்நிறம் காட்டும் திராட்சை மதுக் குடித்துச் சொக்கிப் போகின்றானே, அவனைப் பாருங்கள். அவன் மேனியிலே ஏறியுள்ள மினுமினுப்பை கவனியுங்கள். கையிலே டாலடிக்கும் மோதிரத்தை, ரிஸ்ட் வாட்சை மேலே நெளிகின்ற ஸில்க் ஆடைகளை கவனியுங்கள். திமிரேறிய அவன் கையிலே

பளிங்குக்கிண்ணத்தில் பளபளக்கும் சிவந்த மதுவை மட்டும் தானு அவன் உறிஞ்சுகின்ருன்?

இல்லை. ஆயிரமாயிரம் உழைப்போரின் உடல் ரத்தத்தையும் உறிஞ்சுகிற அட்டை அவன்.

முத்துப்பல் காட்டி முறுவலித்து மோகம் கொழுத்த ஒய்யிலாக நீட்டி நெளிகின்ற அந்த சர சாங்கியின் காதுகளிலே டாலடிக்கிற லோலக்கின் சிவப்புகள் —

நம்மைப் போன்ற தொழிலாளிகள் சிந்திய ரத்தக் கண்ணீர்த் துளிகள் என்பதை அவள் அறிய மாட்டாள்.

சங்கு போன்ற அவளது கழுத்தின் அழகுக்கு அழகு செய்யும் முத்துமாலை, தங்கச் சங்கிலி—

நம் போன்ற உழைப்போரின் இதய நரம்புகள். ரத்த நாளங்கள் அவை என்பதை அவள் உணரமாட்டாள். உணர மூளையும் கிடையாது.

பட்டுப் போன்ற அவள் சருமத்தைப் போர்த்திக்கிடக்கின்ற ஆடைகள், நவயுக டிசைன்களில் வெட்டித் தைத்த நாகரிக டிரெஸ்கள் —

எல்லாம் நம் போன்ற உழைப்பாளிகளின் ரத்தம்...ரத்தம்...ரத்தமேயாகும்.

அதை அவன் உணரமாட்டான்.

இதோ இங்கே கவனியுங்கள்.

புதுப்பெண்ணின் மகிழ்வு மின்னிச் சிவந்த கன்னங்கள் போல ஒளிச்சிரிப்பு காட்டுகின்ற பாலிஷ் அழியாத பிளஷரில், தலை தெறிக்கும் வேகத்திலே ஓடுகிருனே முதலாளி மகன் முதலாளி —

அவனது டம்ப வாழ்வு நம் போன்ற எண்ணற்ற உழைப்பாளிகளைப் பிழிந்தெடுத்த சாறு. அதைச் சொல்லும் அவனது ஆடம்பரப் பொருள் எல்லாம். ஆனுல் அவன் அதை ஏற்க மாட்டான்.

கோடை வெயிலைப் பொருது குளிர்மலை முகடு தேடி ஓடுகின்ற சுகவாசி... சோம்பல் வாழ்விலே அலுப்புற்ற காரணத்தால் இன்பம் நாடி யாத்திரா மார்க்கத்திலே கிளம்பிவிட்ட. உல்லாசி .. கட்டிய மனைவியின் காமசுகம் கசப்புற்றதால் கட்டிளம் பெண்களைத் தேடியலைகின்ற ரசிகசிகாமணி —

எல்லோரும் உழைப்போரின் ரத்தத்தை, தசையை, உடலை, உயிரை அஸ்திவாரமாக்கி உயர்ந்த 'உத்தமர்கள்'! இவர்கள் ஆடம்பர வாழ்வு வாழும்போது, இவர்களது டம்ப வாழ்வுக்கு வகை செய்வதற்கு 'இல்லாதவர்கள்' உழைத்துச் சாக வேண்டும் என்பது விதியாம்!

அப்படிச் சொல்லும் கசடன் எவனேயாயினும் சரி, அவனுக்குக் கசையடி கொடுக்க வேண்டும் என்று குமுறுகிறது கொதிப்புற்ற எனது உள்ளம்.

விதி என்றும் கடவுள் என்றும் பசப்பி, மக்களை குருடர்களாக்கி, தங்களுக்கு — தங்களது நலத்துக்கு — லாபத்துக்கு பயன்படுத்திக்கொள்கின்ற கும்பல்

களை நசுக்கவேண்டும் என்று எனக்கு ஆத்திரம் பற்றுகிறது.

உண்மையாக யார் உயர்ந்தவர்களோ, யார் உத்தமர்களோ, நியாயப்படி யாருக்கு வாழ்க்கை வசதிகள் சேரவேண்டுமோ, அவர்கள் வஞ்சிக்கப் படுகிறார்கள்; வயிற்றிலடிக்கப்படுகிறார்கள்; அடக்கி ஒடுக்கி வாயில்லாப்பூச்சிகளெனத் திரியும்படி பழக்கி வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

இச் செயலுக்கு சாதகமாகச் சிருஷ்டிக்கப்பட்ட எத்து வேலைகளே கடவுள், விதி, கர்மம் முதலிய பொய்மைகள்.

மனிதர் மனிதராக வாழ வேண்டுமானால். இத் தகைய முட்டாள்தனமான, குருட்டுத்தனமான, பொய்மைகளுக்கு, பசப்பு வார்த்தைகளுக்கு,பாழ்மை எண்ணங்களுக்கு சாவுமணி அடித்தாக வேண்டும்

உழைப்போர் உரிமையுடன் வாழ வகை செய்யாத சமுதாயத்துக்கு, சமூக தர்மங்களுக்கு, போலி கௌரவங்களுக்கு அடியுங்கள் சாவுமணி!

புதுயுகம் பிறக்க வேண்டுமா? புதிய உலகம் அமைக்கப் பெற வேண்டுமானால், புதிய சமுதாய அமைப்பு தலைதூக்கவேண்டுமானால், சமூக முன்னேற்றம் தேவையானல் —

அடியுங்கள் சாவுமணி —

மக்களின் அறியாமைக்கு.

மக்களை அறிவில்லாதவர்களாக்க முயலும் மடத்தனத்துக்கு.

மக்களை அடிமைகளாக்க முயல்கிற சுரண்டும் கும்பலுக்கு.

மக்களின் மிருக வெறிக்கு.

மக்களின் கண்மூடிப் பழக்கங்களுக்கு.

அப் பழக்கங்கள் விதைத்துவருகின்ற விஷ விளைவுகளுக்கு.

அதன்பயனாக அமைதிகுலைத்து கவலை விதைத்து நச்சுச் சூழ்நிலை நிறைக்கின்ற நோய்களுக்கு, நாச நிலைமைகளுக்கு.

அடியுங்கள், அடியுங்கள் சாவுமணி!


சிறுமைகளைக் கண்டு சீறுகின்ற

கோரநாதன்

கொதிப்புற்றுக் கூறுகிறார்

கொடு கல்தா!

யாருக்கு ? எதற்காக ?

புதிய புத்தகம் பதில் சொல்லும்

வெளியிடுவோர்

எரிமலைப் பதிப்பகம்

துறையூர் : : திருச்சி Dt

# 2

'உள்ளதைக் கொண்டு திருப்திப்படு' என்று சொல்வது மடத்தனமான புத்திமதி. 'உன்னிலும் உயர்ந்தவனைக் கண்டு பொறாமைப்படாதே, உன்னை விடத் தாழ்ந்தவனின் நிலையைவிட உனது நிலை அம்மா பெரிதென்று அகமகிழ்க!' என்ற நீதிவாக்கியம் உருப்பட விடாமலடிப்பது.

உழைப்பவனை அடிமையாக்கி வைப்பதற்காக விளையாடவிட்ட கடவுள், விதி, கர்மம் முதலிய சிறுமை எண்ணங்களைப் போன்றவையே இச் சின்னத்தனமான புத்திமதிகளும் என்பது எனது எண்ணம்.

மனிதனது வாழ்க்கை நிலை உயரவேண்டுமானால், இத்தகைய முட்டாள்தனமான எண்ணங்களுக்குச் சாவுமணி அடித்தாக வேண்டும்.

உழைத்து வேர்த்தபடி வீடுதிரும்புகிறான் ஒரு தொழிலாளி. அவனுக்குக் காத்திருக்கிறது ஆறின கஞ்சி. அதற்கோ உப்பு கூட இல்லை.

மற்றுமோர் உழைப்பாளிக்குக் கஞ்சிக்கும் லாட்டரி. அவன் பழஞ்சோற்றுப் பானை நீரைச் சலசலக்க விடுகின்றான். பருக்கை ஒன்றிரண்டு கூடயில்லை. வெறும் 'நீராகாரத்தை' ஊற்றி வயிற்றெரிச்சலைத் தீர்க்கிறான்.

அதே வேளையிலே, சும்மா மெத்தையிலே சோம்பிப் புரண்ட சீமானுக்கு மாலைக் காப்பி வருகிறது. ஸ்வீட்டும் ஸாவரியும் வருகின்றன. ஆரஞ்

சுப் பழமும் இருக்கிறது. உரித்துக் கொடுக்க வேலையாளும் அருகே நிற்கிறான். காப்பியை ருசித்த சீமான் சீறுகிறார், அதற்குச் சீனியில்லை என்று.

'மூவர் கவலையும் ஒரே ரகமானது தானா? அப்படிச் சொல்வது புத்திசாலித்தனம் தானா?' என்று கேட்கிறேன்.

கஞ்சிக்கு உப்பு இல்லை யென்பாருக்கும் பாலுக்குச் சர்க்கரையில்லை யென்பவருக்கும் கவலை யொன்றே எனக் கயவன் ஒருவன் கூறினான். மனிதத்தன்மையற்ற பேச்சு ஆகும், இன்று அப்படிச் சொன்னால்,

இந்நிலையிலே, பருக்கையற்றவன் வழிதெரியாமல் வாழ்வது எப்படி சாத்தியம்? கஞ்சி குடிப்பவன் காலைக் காப்பியும், மாலையிலே கொக்கோவும், இரவில் ஓவலும் பருகுகிற சோம்பேறிக் கனவான் நிலைகண்டு பெருமூச்சு எறியாமல் வாழ்வது எவ்விதம் இயலும்?

'ஆசைப்படாதே! அடக்கு உன் ஆசையை!' என்று ஒடுக்கிவிட்டு, நூறை ஆயிரமாகவும். ஆயிரங்களை லட்சமாகவும், மேலும் மேலும் அதிகமாகும்படியும் பெருகச் செய்ய திட்டங்களிட்டுத் திண்டிலே சாய்ந்து கனவுகள் காண்கின்ற ஒரு சிலரின் மண்டையிலடிக்க வேண்டியது அல்லவா மனிதப் பண்பு.

கொள்ளைக்காரர்களையும் கொலைகாரர்களையும் அடக்க, அழிக்க விரும்புகிற நியாயம், சமூக அமைப்பு முறை எல்லாம் உண்மையான நீதியை

யும் உயர்ந்த சமுதாய முறையையும் உலகிலே நாட்டவேண்டுமானால், உயிர்க்குலத்தின் பெரும் பாலோரைச் சுரண்டி, உயிர்வாழ்வோரை நடை பிணங்களாக்குகின்ற பணமூட்டைகள் ஒருசிலருக்குச் சிட்டுக்கிழிக்க வேண்டியது தான் சரியான செயலாகும்.

இன்றையப் பொருளாதார அமைப்பு முறை வெறும் ஹம்பக். மனிதரை மனிதர் ஏய்க்கின்ற எத்து வியாபாரம். வஞ்சிக்கின்ற துரோகம் மட்டுமல்ல. மனித சமுதாய நலனுக்கு, வளர்ச்சிக்கு, ஊறுசெய்கிற பண்பும் ஆகும்.

பொருளாதாரம் சரியானபடி பகுத்து அமைக்கப் படாததனால், மனித சமுதாயத்திலே தாண்டவமாடுகிற கேடுகள் மிகப்பல. ஏழ்மை என்பது பாபம், தரித்திரமாகயிருப்பது மகத்தான குற்றம்; ஏழை எளியவர்கள் தரித்திரங்கள் பெருவியாதிக்காரர்களைப்போல வெறுத்து ஒதுக்கப்பட வேண்டியவர்கள் என்று சமுதாயத்தின் மேல் அந்தஸ்திலே உள்ளவர்கள் நம்புகிறார்கள். அவர்களைத் தாழ்ந்தவர்களாக்கி ஒதுக்கிவிட்டதனால், பணம் இல்லாதவர்கள் மனிதர்கள் என்ற தன்மையை மறந்து, வசதிகளை இழந்து, கண்டபடி வாழ்கிறார்கள். அசுத்தமும், போதிய உணவு இன்மையும், நாகரிக முறைகளை, அறிவு வளர்ச்சி விவரங்களை அறிந்துகொள்ள வசதியின்மையும் — எல்லாமாகச் சேர்ந்து அவர்களை மனித ஜந்துக்களாக, வியாதி பற்றிய அருவருப்பு காட்டப்பட வேண்டியவர்களாக மாற்றி விடுகின்றன.

அவர்கள் உழைக்கிறார்கள், உழைப்புக்கு உரிய மதிப்பு கிடைப்பதில்லை.

உழைக்கத் தயாராக இருக்கிறார்கள். உழைப் புக்கு விலையில்லை.

அதனால், அவர்கள் பட்டினிப்பட்டாளத்தின ராகி மண்ணோடு மண்ணாய் சாய வேண்டிய நிலை ஏற்பட்டு விடுகிறது.

அவர்களும் மனிதர்கள் தானே? அவர்களுக்கு வாழ்க்கை வசதிகள் வஞ்சிக்கப்பட்டிருப்பதேன்?

ஒரே காரணம் —

அவர்கள் உழைப்போரின் குடும்பத்திலே உழைப்பை நம்பி உயிர்வாழ வேண்டிய ஜந்துவாகப் பிறந்து விட்டது தான்.

தொழிலாளியின் மகன் தொழிலாளியாகத் தான் வாழவேண்டும் என்று சமுதாயம் சொல்ல வில்லை. அது தவிர வேறு வழியில்லை. சமுதாய அமைப்பு முறை – பொருளாதார நிலை – அப்படித் தான் வழிகாட்டுகிறது.

இதே வேளையில், மற்றொரு காட்சியையும் காணுங்கள்!

இதோ வாயிலே 'வில்ஸும்', மேலே கமகமக் கும் யுடீ கொலானும், முகத்திலே குட்டிக் கூரா வும் சேர்ந்து ஏக அமர்க்களமான வாசனை அலைகளைப் பரப்பும் பதார்த்தமாக அலைகின்றானே சின்ன முத லாளி —

அவனிடம் திறமை இருக்கிறதா? அவன் உழைத்தானா; உழைக்கத் தயாராக இருக்கிறானா?

இல்லை. அவன் சுத்த சோம்பேறியாக இருக்கலாம். ஐம்பப் படிப்பு, கல்யாணப் படிப்பு என்ற தன்மையில் கலாசாலை சென்று வந்தவனாக இருக்கலாம்; மண்டூகமாக இருக்கலாம்.

என்றாலும் அவன் ஒய்யார வாழ்வு வாழ்கிறான் அநாவசியமான ஆடம்பரச் செலவு, போலி கௌரவம் பெற ஐம்பச் செலவுகள், உல்லாசமாகப் பேசி மகிழ்கிற — அவன் புகழ் பாடுகிற — நண்பர்களுக்கு சப்ளைச் செலவு — இப்படி எவ்வளவோ! பணம் தண்ணீர் மாதிரி ஓடுகிறது அவன் கையில், ஏன்?

அவன் முதலாளி மகன் முதலாளி பணக்காரக் குடும்பத்திலே பிறந்துவிட்ட செல்லப் பிள்ளை என்ற ஒரே காரணத்தினால், அவன் இஷ்டம் போல் ஊதாரித்தனமாக வாழமுடிகிறது

இவ்விதமான புல்லுருவிகளைக் கண்டும் காணாதது போல் கண்மூடிக்கொண்டு, தெருவிலே பிச்சை எடுப்பவனைப் பார்த்து 'அம்மா பெரிதென்று அகமகிழ்' வேண்டுமென்றால், அது போன்ற முட்டாள் தனம் வேறு கிடையாது என்பேன்.

வாழ்வு நிலை உயர வேண்டுமானால், சமுதாய அந்தஸ்து மாறவேண்டுமானால், உயிர்க்குலத்திலே மறுமலர்ச்சி ஏற்பட வேண்டுமானால், பொருளாதார அமைப்பு மாற்றப்பட வேண்டும். உள்ளதைக் கொண்டு திருப்தியடைபவர்களால் அது சாத்தியமில்லை.

புதிதாகப் பிறக்க, ஆராய்ச்சிகள் உதயமாக, முதலில் எண்ணி எண்ணி உயர் நிலையில் ஆசை கொண்டு, நம்பிக்கை வைத்து, போராடியாக வேண்

டும். பழைய நிலையை ஒழிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டால் அழித்துவிடத்தான் வேண்டும்.

சம்பந்தப்பட்டவர்களை 'மாறு அல்லது மாண்டு போ!' என்று தான் அறிவுலகம் எச்சரித்து வருகிறது.

தங்களை உணர்ந்து, தங்கள் போக்கையே மாற்றிக் கொண்டு, மனிதகுலத்துக்கு சகோதர மனிதர் என்ற தன்மையில் நியாயமானதைச் செய்ய முன் வராதவர்களின் பொய்மை வாழ்வுக்குச் சாவுமணி அடிக்க வேண்டிய காலம் விரைந்து கொண்டிருக்கிறது.

அன்று —

பிறப்பால் உயர்ந்தவர்கள், கடவுள் கருணையால் பணக்காரர்களாகவே பிறந்தவர்கள், பூர்வ ஜன்ம புண்ணியத்தால் உழைக்காமலே உல்லாச வாழ்வு பெற்றுவிட்டவர்கள் என்பன போன்ற துரோகச் செயல்களுக்கு சாவுமணியடித்து சமாதி கட்டப்படும்.

---


# தேவகி

(நாவல்)

வல்லிக்கண்ணன் எழுதியது

அவள் ஒரு தாசி. 'தொழில்' விரும்பாத யுவதி குடும்பப் பெண் ஆக விரும்பினாள். திருமணம் நிகழ்ந்தது. வாழ்வின் மறுமலர்ச்சி மணமுள்ளதாயில்லை. மறுபடியும் வழுக்கிவிழுந்தாள். ஏன்?

இது தான் கதை

இது சாந்தி நிலைய வெளியீடு

# 3

இன்றைய சமுதாயம் நேர்மாறான பண்புகளின் வளர்ப்புப் பண்ணையாக — எதிர் மறைகளின் போஷிப்பு நிலையமாக — உள்ளது.

நவநாகரிகத்தின் பகட்டுதலைக் காண்கிறோம். இரும்பின் இயந்திரச் சிரிப்பைக் கேட்கிறோம். செல்வத்தின் டாம்பீகத்தை உணர்கிறோம். அறிவின் பெரும் சக்தியை அறிகிறோம்.

அதே வேளையில் பக்கத்திலேயே காட்டுமிராண்டித்தனத்தையும், பழங்கால முறைகளையும், தரித்திரத்தின் பயங்கரக்கொலுவையும், அறியாமையின் வியாபகத்தையும் கண்டு உணரலாம்.

பட்டணங்களுக்கு நேர்மாறானபட்டிக்காடுகளைப் பற்றிச் சொல்லவில்லை. நாகரிகம் மத்தாப்பூப் பகட்டும் சிந்தி ஒளியுறுத்துகிற நகரங்கள் கூட மனிதவர்க்கத்தின் செயலற்ற தன்மையை எடுத்துக் காட்டும் நரகங்களாக உள்ளன என்பதை யாரும் உணரமுடியும்.

புதுயுக மாதிரிகளாக அமைக்கப்பெற்ற பெரிய பவனங்கள், மாடிகள், உல்லாச மாளிகைகள் அலங்காரப் பெயர்கள் ஏற்ற ஆடம்பர நிலையங்கள் இருக்கின்றன.

அதே தெருவிலே, சாக்கடையோரத்திலும், ரஸ்தாவைச் செப்பனிடக் கொட்டிய கற்கள் மேலும், கடைகளின் வெளிப்பலகைகளிலும் ரயில்வே நிலையங்கள் முன்னிலும் ஒண்டிக்கிடக்கின்ற ஆயிரமாயிரம் மனித உருவங்களும் உண்டு.

படுக்க இடமில்லா மக்கள் எவ்வளவோபேர். ஒண்டியிருந்து கஞ்சி காய்ச்சி வாயிலே ஊற்றிக் கொள்ள ஓலைக்குடிசை கூட இல்லாத ஏழைகள் எத்தனையோ ஆயிரம்! மரத்தடிகளிலும், சுவரோரங்களிலும் அடுப்பு மூட்டும் 'அன்றாடங்காய்ச்சி'களுக்கு அந்தரங்க அறைகள் இல்லை அதனால் சாலையோர இருளிலே ஒதுங்கி அணைந்துகிடக்கும் ஆண் பெண்கள் நாகரிக நகரிலே அன்றாடக் காட்சிகள்!

வசதியான வீடுகள் இல்லாமல் கிடைத்தது போதும் என்று நாலு சுவர்களுக்கிடையே ஒடுங்கி அல்லுறும் ஏழைக் குமாஸ்தாக்கள் உழைப்பாளிக் குடும்பங்கள் எத்தனை எத்தனை. 'ஒண்டுக்குடித்தனம்' என்று புகுந்து நரகவேதனை அனுபவிக்கும் பிறவிகள் கணக்கிலர்.

இன்னும், இடிந்து விழும் வீடுகளைச் செப்பனிட வகையில்லாமல் அவை முழுதும் வீழ்ந்து 'கட்டமண்ணாய் குட்டிச்சுவராய்' மாறுவதை சகித்துப் பெருமூச்சு எறிவோர்; மழையின் ஒழுக்கிலே நீச்சலடிக்க நேர்கிறவர்கள் — இப்படி, வாழ்வதற்கு வசதியற்ற, சுகமாய் இருக்கவும், படுக்கவும், கவலையற்றுத் தங்கவும் வீடுகளற்ற 'இல்லாதவர்கள்' எவ்வளவு பேர் என்பதற்குக் கணக்கே இல்லை.

நாகரிகமும் அறிவும் உழைப்பும் மின்சார விளக்குகளைச் சிருஷ்டித்துவிட்டன. அவசரமாக இயங்குவதற்கும் வசதியாகச் செல்வதற்கும் ஊர்திகள் பலப்பலவிதமாகப் படைத்துவிட்டன. சோம்பிச் சாய, புரள, படுக்க, உடலை அஷ்ட கோணல்களாக்கி சோம்பல் 'ஆசனப்பயிற்சி' பண்ண, பல

வித உருவங்களில் அழகாக, நாகரிகச் சாய்மானங்கள் பல அமைந்துவிட்டன. ஆராய்ச்சி, அறிவு, ஆர்வம், உழைப்பு எல்லாவற்றின் கலப்பினாலும் பிறந்துள்ள நலன்கள் மிகப்பல.

ஆனால், எல்லாம், சோம்பேறிகளை அதிகச் சோம்பேறிகளாக வளர்ப்பதற்குத்தான் பயன்படுகின்றன. உழைப்போருக்கு உதவுவதில்லை. யாருக்கு வாழ்க்கை வசதிகள் தேவையோ அவர்களுக்கு இவை ஓர் சிறிது கூட உதவியளிக்கவில்லை. சோம்பேறிகள் அதிகச் சோம்பேறிகளாக வளர வளர, உழைப்போர் அதிகம் — மிக அதிகமாக — உழைக்க வேண்டியதாகிறது.

உழைப்பவர்களுக்கோ குறைந்தபக்ஷ உணவு, ஓய்வு, தங்கும் இடம், உடை முதலியவைகளுக்கு கூட பஞ்சம் ஏற்பட்டுவிடுகிறது.

அப்படியானால், அறிவின் மின்வெட்டு-ஆராய்ச்சியின் விளைவு எனப் பிரமாதப் படுத்தப் படுகிறவையெல்லாம் சாதாரண மக்களுக்காகத்தான் — பொது மக்களின் — உயிர்க்குலத்தின் உயர்வுக்குத் துணை செய்யத்தான் என்பது அர்த்தமற்ற பேச்சாக ஒலிக்கவில்லையா? அவையெல்லாம் — நீளப்பேசுகிறவர் சாலகர்களின் சுயநல எத்துவேலைகள் — வெறும் ஹம்பக் என்று தானே சொல்லப்பட வேண்டும்?

விளக்குக்கு மண்ணெண்ணெய் கிடைப்பதில்லை. பிற எண்ணெய்கள் வாங்கி எரிக்கக் கூடப் பணமில்லை. ஆகவே சாப்பாட்டு வேலையை அந்திப் பொழுதிலேயே முடித்துவிட்டு இருட்டிலே ஒடுங்கி விடும் குடும்பங்கள் எத்தனையோ உண்டு நம் நாட்

டிலே. நிலாவுக்காகக் காத்திருந்து, நிலவொளியிலே சாப்பிடுவதும், தானியங்களில் கல் பொறுக்குவது, சலித்தெடுப்பது முதலிய வேலைகளை முடித்துக் கொள்கின்ற 'இல்லாத' குடும்பங்கள் இன்றும் இருக்கின்றன கிராமங்களிலே.

இது மின்சார யுகம் தான். யார் இல்லை என்றது! ஆனால் அந்த மின்சாரம், ஒளி கம்பிப்பல்லிலே கிறுக்குச் சிரிப்பு சிதறச் செய்கின்ற – சந்திரன் குஞ்சுகள் போன்ற விளக்குகள் எல்லாம் யாருக்கு அதிகம் பயன்படுகின்றன?

பொருள் உள்ள சோம்பேறிகளின் உல்லாச பவனங்களையும், கேளிக்கை மண்டபங்களையும் ஒளியுறுத்துவதற்காக! விழலை ஆடவிட்டு பணம் பிடுங்கி தங்கள் பைகளை நிரப்பும் டீஸினஸை, கலையின் பெயரால் சிறப்புற வளர்க்கிற பணமூட்டைகளுக்கு பக்கபலமாக! இந்த ரீதியிலே வாழ்ந்து. சகல வழிகளிலும் பணம்பிடுங்குகிற படாடோபக் காரர்களுக்கு சேவகனாய் உதவுகிறது அறிவுலக ஆராய்ச்சி.

உலகிற்கு – உயிர்க்குலம் முழுமைக்கும் – அவை பயன்பெற முடியும், தெருவிளக்குகள் போல அவை பொதுவுடமையிலே செயலாற்றப்படின்.

அந்நிலை வரும் வரை, ஒரு சிலருக்கே – 'இல்லாதவர்'களை சுரண்டுகிற 'உடையவர்'களுக்கே — உபயோகப்படும்.

இருளை ஓட்ட எலெக்ட்ரிக் லைட்டும், கீத ஒலியலைகளைப் பரப்ப ரேடியோவும் கிராமபோன்களும் இருப்பதனால் ஏழைகளுக்கு என்ன பயன்?

வேகமாக ஊர்ந்து செல்ல மோட்டாரும். தூரத்தைக் குறைக்க உதவுகிற உலகின் சகல பாகங்களையும் பக்கத்திலே உள்ளன போல் எண்ணச் செய்கிற, குறைந்த நேர இன்பகரமான பயணத்திற்கு உரிய ஆகாய விமானங்களும் அங்குமிங்கும் பறந்து என்ன செய்ய? அவற்றால் உயிர்க்குலத்தின் பெரும்பாலோருக்கு ஓர்சிறிது பயனேனும் உண்டா?

ஆதலின், இவையெல்லாம் இப்பொழுது ஒரு சிலரின் — செல்வர்களின் — ஏகபோக உரிமையாக உள்ளன. எல்லோருக்கும் அவசியமானவைகள் சிறு கும்பலின் சுயலாபத்துக்கு மட்டுமே பயன்படுவது தான் அறிவுடைமையா? மக்கட்குலத்துக்குச் செய்யப்பெறும் வஞ்சகமில்லையா?

இத்தகைய வஞ்சகங்களுக்கு சாவுமணி அடிக்க வேண்டியது அல்லவா சமுதாய சீர்திருத்தத்துக்கு உழைக்க முன் வருகின்ற உத்தமர்களின் முதல் வேலை?

உழைப்பு கௌரவிக்கப்படவேண்டும். உழைப்புக்கு உரிய மதிப்பு வேண்டும். உழைப்புக்குத் தகுந்த ஓய்வும் வசதிகளும் ஒவ்வொருவருக்கும் வேண்டும், ஒவ்வொருவரும் உழைக்க வேண்டும்.

அதற்காக சுயநலத்துக்கும், சோம்பேறித்தனத்துக்கும், பணமூட்டைகளின் படாடோப மோகத்துக்கும் – பொதுவாக, உழைப்பவர்களின் வாழ்விற்கு ஊறுசெய்கின்ற அனைத்துக்கும் – சாவுமணி அடித்தாக வேண்டும், புதுயுகம் உதயமாக வேண்டுமானால்!

# 4

வாழ்க்கையில் அல்லல் உறுவோரின் கதைகளை அறியும் போது துயரம் ஏற்படுகிறது. கோபம் பொங்குகிறது. சில சமயங்களில் மனித சமுதாயத்தின் மீது வெறுப்பு – இதயத்தின் அடித் தலத்திலேயிருந்து பொங்கி வரும் கசப்பு - உண்டாகிறது. மனிதரை மனிதராக வாழவிடாத இன்றைய சமுதாயமுறை ஒழியட்டும்; அழியட்டும்; மண்ணோடு மண்ணாகட்டும்; நாசமாகட்டும் என்று சீறிச் சபிக்க வேண்டும் போல் உள்ளம் கொதிக்கிறது. ஆனால், நானும் செயலற்ற ஆயிரமாயிரம் தொழிலாளர்களிலே ஓர் தொழிலாளி என்ற நினைவு எழவும் இதயம் சாம்பிக்குவிகிறது.

இன்றையப் பொருளாதார சமூகத்திலே தொழிலாளிகள் கவலையால், சோகத்தால் நெட்டுயிர்த்து, அப் பெருமூச்சில் தங்களையே கரைத்துக் கொள்வது தவிர வேறு போக்கு இல்லை. இன்று, காலத்தின் கொடுமையையும், மனிதரின் சுயநலச் செயல்களையும் மிருகத்தனங்களையும் எண்ணி எண்ணிக் கொதிப்புற்று, அவ் உள்ளத்தின் தீயிலே தங்களைக் கறுக்கிக்கொள்வது தவிர உழைப்பாளிக்கு வேறு வாழ்வில்லை.

வருங்காலத்தைப் பற்றி அவன் கனவுகள் கண்டு பயனில்லை. கனவு காண வேண்டிய அவசியமும் இல்லை. நிகழ்காலத்தின் சுமையே அவனை மண்ணோடு மண்ணாக்குவதற்காக மேலும் மேலும் அழுத்தித்தாழ்த்துகிறது. வாழ்வின் சகலவிதமான பிரச்னைகளிலிருந்தும் விடுபடவே வழிதெரியாது திணறு

இன்ற தொழிலாளி எதிர்காலத்தைப் பற்றி இன்பக் கனவு காண்பதால் என்ன பிரயோசனம்?

தனது வாழ்க்கையைப் பற்றி அவன் எண்ணப் புகுந்தால், — இனி என்ன செய்யலாம்? நமக்கு வேலை போய்விட்டால் வயிற்றுப்பாட்டுக்கு என்ன செய்வது? பிழைப்பதற்கு வேறு என்ன செய்ய வேண்டும்? நமக்கு வியாதி வந்தால் என்ன செய்வது? பெண்டாட்டி பிள்ளைகளைக் காப்பாற்ற என்ன செய்வது? — என்ன செய்வது, என்ன செய்வது என்கிற பிரச்னைகளே பயங்காட்டும். மூளையைக் குழம்பச் செய்துவிடும்

உழைப்பவர்களுக்கு உலகம் விதித்திருக்கிற வாழ்வு, அவர்கள் உலகில் உயிர்வாழும் வரை உழைத்தேயாக வேண்டும் என்பது. உழைத்து உழைத்துச் செத்துக்கொண்டே வாழ்கிறவர்கள், செத்துச் சோர்ந்து உழைத்து அலுத்து மூச்சை விட்டு உண்மையாகவே செத்துப்போகும் போது தான் ஓய்வும், வாழ்க்கைப் பிரச்னைகளிலிருந்து விடுதலையும் பெறமுடியும், இன்றைய சமுதாய அமைப்பிலே.

உழைப்பவர்களுக்கு நோய் வரக்கூடாது. நோய் வந்தால் அவர்கள் சீக்கிரம் சாவது நல்லது. ஆனால் மரணம் என்ன எல்லோருக்கும் சுலபமாகவா வந்து விடுகிறது! அதனால், நோய் நீங்கினாலும் உள்ளக் கவலை நீங்குவதில்லை, கடன் சுமை நீங்குவதில்லை. இவை அழுத்தும் போது ஆள் தேறப் போவதுமில்லை. தேறுவதற்குத் தேவையான சத்தான உணவும் கிடையாது. நல்ல வைத்திய வசதிகளும் கிடைக்காது. ஆகவே தனக்கு தன்னை நம்பி உயிர் வாழ்

கிறவர்கள், சூழ்ந்துள்ளவர்கள் எல்லோருக்கும் தீராத தொல்லையாய், பெரும் சுமையாய் மாறிவிடு கிறுன். தனக்குத் தானே சுமையாகி 'செத்துத் தொலைஞ்சாலும் நல்லாயிருக்குமே' என்று அவனும், அவனைச் சேர்ந்தவர்களும் எண்ணும் நிலை ஏற்பட்டு விடுகிறது.

பெரும்பாலருக்கு வாழ்க்கையிலேயே பற்று இல்லாத போது – வாழவேண்டும் என்ற எண்ணத்தை வளர்க்க சூழ்நிலை உதவாத போது — வாழப்பிறந்தோம், வாழ்வோம் என்ற தெம்பை உண்டாக்க இயலாத வாழ்வு முறை நீடிக்கும் போது மனித சமுதாயம் எப்படி உருப்படமுடியும்?

எங்கும் வியாதியும், திருப்தியின்மையும், சோம்பல் உபாசனையும் கோர தாண்டவமிடுகின்றன. கொடிய நோய்கள் மனிதரை காணச் சகியாக் கோரங்களாக்கிவிடுகின்றன. நாகரிகம், அறிவு வளர்ச்சி, ஆராய்ச்சி எல்லாம் உயர்நிலையிலே உள்ளதாகச் சொல்லப்படுகின்ற இன்று கூட, மனிதர் ஆபாச, அநாகரிக, மிருகங்கள் போன்று, அருவருப்பு தரும் பிண்டங்களாகி விடுகிறுர்கள் கொடிய வியாதிகளின் கையிலே.

அவற்றை ஒழிக்கவோ, மறைத்து ஒயிலாகத் திரிந்து மயக்கவோ வகையற்றவர்கள் மனிதப்பிறவிகளின் தன்மையை பழிப்புக் காட்டும் கோரணிகளாக, நடைப்பிணங்களாக, அலைகின்முர்கள். அவர்கள் சகலவிதப் பசிகளையும் அரிப்புகளையும் தீர்த்துக் கொள்ள, கண்டபடி திரியும்போது, 'இவர்களை இப்படி நடமாடவிடுவதே தப்பு; இவர்களைக் குணப்படுத்த வேண்டும்; குணப்படுத்த முடியாவிட்டால்,

சுட்டுக் கொல்லவேண்டும்' என்று கூவத் தோன்றுகிறது எனக்கு.

நாகரிகம், கலாசாரம் முதலிய மேற்போக்கான பேச்சுக்களை பொய்யெனச் சிரித்துச் சொல்லும் பிச்சை எடுக்கும் பண்பும், விபசாரமும் மனித சமுதாயத்தின் உண்மைத் தன்மையை அம்பலப்படுத்துகின்றன. பிச்சைக்காரர்களையும் விபசாரகர்களையும் ஒழிக்க முடியாது. ஒரு அளவுக்குள் கட்டுப்படுத்தலாம். சிருஷ்டி சக்தியின் உன்னதப் படைப்பு என்று பெருமை பேசுகிற மனித ஜந்துகளின் மானம் பறிபோகாமல் இருக்க வேண்டுமானால், இக்குறைகளை ஒடுக்கியாக வேண்டும் மனிதவர்க்கத்தின், அவசியத்தினாலும் உல்லாசத்திற்காகவும். முழுமனதுடன் ஈடுபட்டும். சந்தர்ப்பச் சூறைகளினால் ஆளாக்கப்பட்டும், செய்யப்பெறுகிற சிறுமைகளுக்கு எல்லாம் சாவுமணி அடித்தாக வேண்டும்.

மக்கள் நன்றாக வாழ எல்லோருக்கும் வசதிகள் செய்யப்பெற வேண்டும். நோய் வராது காக்க மக்களைப் பழக்குவதுடன், வசிக்கும் சூழ்நிலைகள் புசிக்கும் உணவுகள் முதலிய அனைத்தையும் கவனித்து சுகாதார முறையுடன் அமைக்க வேண்டும் அமைத்துக்கொள்ளும் முறையில் மக்களின் அறிவு பல்க வேண்டும். நோய்கள் வந்தால், சமாளித்துக் கொள்ளவும் தேறவும், மீண்டும் சுகநிலை பெறவும் வைத்திய வசதிகள் முதல் எல்லாம் கிடைக்கும் நிலை பிறக்கவேண்டும்.

இன்று அவ்விதம் உள்ளதா? இல்லை.

மனிதரில் முக்கால் வாசிப் பேர்கள் தினசரிப் பிழைப்புக்கே தாளம் போடுகிறபோது, அன்றாட

அலுவல்களை கவனிக்கவே நேரமில்லாது அவகாச மற்று, உழைத்து அலுக்கிற போது, நோய்நொடி கள் வராது காப்பது எங்கே!

உழைப்பினால் வரும் பணம் அன்றாடச் செல வுக்கே சரிக்கட்டி வராத போது, சாதாரணச் சாப் பாடு, உடை முதலியவற்றுக்கே கட்டிவராத போது சத்தான உணவுகளுக்கும், டானிக்குகளுக்கும் — வியாதி வந்தால், மருந்துகளுக்கும். டாக்டர் பில்லுக் கும் கொட்டி அழப்படுவதற்கு ஈடாவதேது!

எவரது பெட்டிகள் நிரம்புவதற்காக உழைத் தார்களோ, எவர் ஆடம்பர வாழ்க்கைக்காக தங் கள் உடலை ஓடாகத் தேய்த்தார்களோ, யாருக்காக தங்கள் முழு நேரத்தையும் உழைப்பையும் செலவு செய்து நம்பிக்கையாய், நாணயமாய் நடந்தார்களோ அவர்களிடம் போய் பல்லெலலாம் தெரியக் காட்டி னாலும் பணம் வராது. ஒரு சில நல்லவர்கள் இரக் கப்பட்டு கொடுக்கலாம், ஒரு சிலர் கடனாகத்தர லாம், என்றாலும் ஒன்றிரண்டு தடவைகளுக்கு மேல் உதவி கிட்டாது.

பெரும்பாலும், முதலாளிகளிடமிருந்து தொழி லாளிகள் நேர்மையான, உரிய, பொருத்த சன்மானங் களை எதிர்பார்க்கக்கூடாது. வியாதியுற்ற காலத் திலே கூட அவ்வித உதவிகள் கிடைக்கும் என எதிர்பார்த்தால் ஏமாற வேண்டியது தான்.

ஒரு கடைமுதலாளி. அவரிடம் நல்ல பெயர் பெற்ற, நாணயமான, யோக்கியமுள்ள உழைப்பாளி — கடைக்கணக்கர். வசதிகளில்லை. ஓய்வு இல்லை. உழைப்பு அதிகம். அப்படிப் பல வருஷங்கள்

உழைத்ததனால் அவருக்கு காசநோய் கண்டது. அவர் இனி சரியாக — நிறைய - உழைக்க முடியாது எனக் கண்ட முதலாளி அவரை வீட்டுக்கு அனுப்பினார் சீட்டுக் கிழித்து. பணம் தரவில்லை, அன்பளிப்பாக. போகட்டும். ஏட்டிலே பாக்கி என்பதற்காக, உள்ள அற்பச்சம்பளத்திலே கூடப் பிடித்துக்கொண்டார் ஒரு தொகையை. பணம் கடனாகக் கேட்டார் உழைப்பாளி. கிடைக்கவில்லை. மருந்து அவர் கடையிலே இருந்தது தான் — கடனாகக் கேட்டார். மறுக்கப்பட்டது. விலை கொடுத்துக் கேட்டபோது கூட, 'பிளாக் மார்க்கெட் ரேட்டு' தான் சொன்னார் முதலாளி' கறாரான விலை. கழிவு இல்லை' என்று! அந்தக் கணக்கருக்கு உண்மையான விலை தெரியும். உண்மையாக உழைத்தவர் தான். என்றாலும் 'கொள்ளை விலை'யில் தான் அவருக்கு மருந்து கொடுக்கப்படும் என்றார் முதலாளி. அது பிஸினஸ்! பிஸினஸில் முதலாளிக்கு லாபம் தான் குறியே தவிர, உழைப்பவனின் உடல் நலம் அல்ல.

ஒரு தொழிலாளி. கை முறிந்து போயிற்று, மில்லிலே வேலை செய்யும்போது. அவரது அஜாக்கிரதையினால் அல்ல. எப்படியோ ஆபத்து விளைந்து விட்டது. கையைக் குணமாக்கிக் கொண்டு திரும்பிய போது வேலை இல்லை என மறுக்கப்பட்டது. அந்தத் தொழிலாளி உழைக்க ஏமாற்றும் பேர்வழியல்ல. எத்தனல்ல. உண்மையாக உழைத்தவர். உழைக்கத் தயாராகவும் இருந்தார், ஆனால், முதலாளியின் அருள் பாலிக்கவில்லை.

இது பிஸினஸ் உலகிலே சகஜம்.

உழைப்பவர்களுக்கு அவர்களது உயிர் நிச்சயமில்லை. வாழ்க்கை நிச்சயமில்லை. வேறு நிச்சய

மில்லை. உழைப்புக்குப் பலனாக வருகின்ற சிறு கூலியிலே மிச்சம் இருக்க இடமுமில்லை, அதனாலே அவர்கள் வாழ வழியில்லை!

அதே வேளையிலே, பணம் கொழுத்தவர்கள் வீடுகளிலே நடக்கும் கோலாகலங்களைப் பாருங்கள் பணத்தின் மிடுக்கான நடனம் என்னென்ன செய்யத் தூண்டுகிறது என்று கவனியுங்கள்!

அதோ அந்த மாமிசபிண்டம் — பகட்டான பட்டுப்புடவை கட்டியிருப்பதால், கண்பறிக்கும் வைரங்கள் அணிந்திருப்பதால் பெண் என்றுதோன்றுகிறது கண் சிமிட்டுகிறது. பிரமாத தலைவலி வந்துவிட்டது போல் நடிக்கிறது.

அதனால், முதலாளி ஐயாவின் செயல்களிலே பரபரப்பு டெலிபோன் மணியின் கணகணப்பு. டாக்டர் ஸாரின் பிளஷர் பறக்க நேரிடுகிறது. டாக்டர் வருகிறார்; போகிறார். அவரது பையிலே பணம் விழுகிறது.

ஒரு 'அரண்மனை'யிலே 'சமூகம் அவர்களுக்கு' சிக்கு, ஏதோ உடல் கொஞ்சம் சுட்டது. சிறு காய்ச்சல், (ஜுரம்) தொழிலாளிக்கு அதுபோல் ஏற்பட்டால், அலட்சியம் செய்துவிட்டு உத்தியோகத்துக்குப் போயிருப்பான். இல்லையெனில். அன்றைய சம்பளத்திலே மண் தான்! ஆனால், முதலாளி ஐயா என்றால்......அவருக்கு அவரே ராஜா! கட்டிலில் படுத்தார், மேலே போர்வை புரண்டது. என்ன, என்ன என்று கேட்டு உபசரணை பண்ண ஆட்கள்...டாக்டர்...மருந்துப் புட்டிகள்... பழங்கள் — இன்னும் எவ்வளவோ!

வசதிகள் இருக்கின்றன, செய்துவிட்டுப் போகிறார் என்கிறீரா? தொலேயட்டும்.

இன்னும் ஒரு காட்சி. அபூர்வ அதிசயமல்ல' சர்வ சாதாரணமானதே.

நல்ல ஜாதி நாய். அதன் ஜடை இருக்கிறதே அது முதலாளி ஐயா கொஞ்சுகின்ற 'உயர்ந்த ரேட் தொழிற்காரி'யின் பவுடர்க்கன்னத்தைப் போல! அவ்வளவு பட்டுப் போன்றது அது! அந்த நாய்க்கு அந்த வீட்டிலே காண்பிக்கப்படும் கவனிப்பு, காதலன் காதலியரிடையே பரிமாறப்படும் அன்பு உபசரிப்பு மாதிரி. வேலேயாட்கள் எல்லோரும் சின்ன முதலாளிக்குக் காட்டுகிற மரியாதையை அந்த நாய்க்குக் காட்டவேண்டும், அந்த முதலாளி–நாய்க்கு என்று தனி வேலேயாள். அதற்கு மாமிச உணவு, ரொட்டி, வெண்ணெய், உயர்ந்த பிஸ்கெட் தினுசு — அடாஅடா! பார்க்கின்ற யாருமே பொருமைப் படவேண்டியது தான்.

மடையர்கள் சொல்லலாம் 'கொடுத்து வைத்த நாய், பிறந்தாலும் முதலாளி வீட்டு நாயாகப் பிறக்க வேண்டும்.' என்று. அத்தகைய மடையர்களின் வாயிலே ஓங்கி அறையவேண்டும் முதலில். பிறகு, ஊதாரித்தனமாக பணத்தை வாரியிறைக்கிற பண மூட்டைகளின் — பரோபகாரம் பேசிப் பணத்தை நாசமாக்குகிற திமிர் தண்டிகளின்—மமதைக்கு சாவு மணி அடிக்கவேண்டும். இச் செயல்களை வளர்க்கின்ற அந்த இனத்துக்கே சாவுமணி அடித்தாக வேண்டும்.

பணம் படைத்த திமிறினல், அளவுக்கு அதிகமான வாழ்க்கை வசதிகள் பெற்றுவிட்ட கொழுப்பி

ஞல், காலத்தைப் போக்குவதற்கு சரியான வழி தெரியாது மதமேறிப்போன வெறியினுல், முதலாளிகளும் சின்ன முதலாளிகளும் ஊர்ப் பெண்கள் மீதும் உழைக்கின்ற வேலைக்காரப் பெண்கள் மேலும் விளையாடத் துடிக்கின்ற 'செல்லப்பிள்ளை'களாகத் திரிகின்ருர்கள். விபசார பிரம்மாக்களாகவும், விபசார ராஜாக்களாகவும் வாழ்கின்ருர்கள்.

அன்றலர்ந்த பனிமலர் போன்ற இளம் பெண்களின் புனிதத்தன்மையையும், சம்பிரதாயங்களால் வலையிடப் பட்ட சிறுபெண்களின் உடலையும் உள்ளத்தையும், வயிற்றுப் பிழைப்புக்காக வேலைசெய்ய வருகின்ற பெண்களின் கௌரவத்தையும் பெயரையும் நாசமாக்கி, சமுதாயத்திலே கறை அதிகம்படியச் செய்கிருர்கள். திமிர்பிடித்த இத் தறுதலைகளின் செயலுக்கு சமாதிகட்டப்பட வேண்டுமாஞல், சுரண்டி வாழ்ந்து சுகபோகம் கொழிக்கின்ற இக் கும்பலுக்கே — முதலாளிவர்க்கத்தினருக்கு — சாவுமணி அடித்தாகவேண்டும்.

---

குத்தும் கிண்டல்கள் !
தைக்கின்ற நையாண்டிச்சொற்கள் !
கதையல்ல ! அளப்பல்ல !
சமுதாயத்தின் சிறுமைகளைச்
சிரித்துச் சிரித்துச் சமாதியாக்க
சுட்டிக்காட்டும் சீரிய சிந்தனைகள்

# நாசகாரக் கும்பல்!

ஆசிரியர்: நையாண்டி பாரதி

இது சாந்தி நிலைய வெளியீடு

---

# 5

பொதுவாக, மனித சமுதாயத்திலே புதுமை வாழ்வு நிலைபெற வேண்டுமானால், மக்களின் உழைப்பைச் சுயநலத்துக்குப் பயன்படுத்திக்கொள்கிற பண மூட்டைகள் மறைந்தால் மட்டும் போதாது.

மக்களை அறியாதவர்களாக்கி. அவர்களது அறியாமையை சுயலாபத்துக்கு உபயோகித்துக் கொள்கிற புரோகிதவர்க்கமும் அவர்களது செயல்களும் ஒழியவேண்டும். மக்களை மடையர்களாய் மண்டூகங்களாய் வாழ வகைசெய்கிற—புரோகிதத்தின் மூலதனமான — மதம் கடவுளர்கள், கோயில் திருவிழா முதலிய எல்லாவற்றுக்கும் சாவுமணி அடித்தாக வேண்டும்.

இன்னும் கலையின் பெயரால் இலக்கியத்தின் பெயரால், அரசியலின் பெயரால், ஆராய்ச்சியின் பெயரால், விஞ்ஞானத்தின் பெயரால் மக்களை, மக்கள் உழைப்பை. மக்கள் காலத்தைச் சுரண்டி, சோம்பல் வாழ்வும் சுகபோகமும் பெற்று வாழ்கின்ற வீணர்களின் பண்புகளுக்கும் சாவுமணி அடித்தாக வேண்டும்.

எல்லாவற்றுக்கும் மேலாக, மக்களின் மடைமைச் செயல்கள். இழிந்த பண்புகள், குருட்டு நம்பிக்கை அறியாமை, சம்பிரதாய விலங்குகள் முதலிய எல்லாவற்றுக்குமே சாவுமணி அடித்தாக வேண்டும்,

மனிதர் மனிதராக உரிமையுடன், சுதந்திரமாக, கவலையற்று, இன்பவாழ்வு வாழவேண்டுமானால்,

வெறும் அரசியல் விடுதலை மட்டும் வழிகாட்டி விட முடியாது.

சமுதாய சீர்திருத்த வாதிகளின் அடுக்குச்சொல் மாரிகள் மட்டுமே செப்பனிட்டுவிட முடியாது.

இலக்கியவாதிகளின் கவைக்குதவாத கனவுகளும் பித்தலாட்டப் புத்தகங்களும் மாத்திரமே உயர்நிலை உண்டாக்கிவிட முடியாது.

மதவாதிகளின் வேத வேதாந்தங்கள், வியாக்கியானங்கள், உபன்னியாசங்கள், உபநிஷதப் பலகணிகள் எதுவுமே ஒளிகாட்டிவிட முடியாது.

பொருளாதாரவாதிகளின் புனரமைப்புத் திட்டங்கள் மட்டுமே வெற்றி காட்டிவிட முடியாது.

மனித சமுதாயம் நல்ல நிலைபெறவேண்டுமானல் அரசியல் விடுதலை எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியம் தான் சமுதாய சீர்திருத்தமும் பொருளாதாரப் புனரமைப்பும். இவற்றுக்குரிய போராட்டத்திலே ஈடுபடத் தூண்ட, செயலில் இறங்கியதும் ஆர்வத்துடன் வெற்றி காணப் போராடுவதற்காக, வெற்றி கிட்டியதும் சிறந்த அமைப்புகளை நிர்வகிக்க இலக்கியங்கள் துணைபுரிய வேண்டும், துணைபுரிய முடியும். ஒரு சிலருக்குமட்டுமே பயன்படுகிற இன்பக்களியாட்ட ஓலங்கள், அவை எத்தகைய அழகிய பெயரில் தரப்பட்டாலும் சரி, அவை சுயநலக்கும்பலின் பேத்தல்களே யாகும். அத்தகைய 'பூர்ஷ்வா' இலக்கியங்களுக்கு வருங்காலம் சாவுமணி அடித்துவிடும் என்பதற்கு நிகழ்காலமே சாட்சி.

இன்று மக்களின் பசி நீங்கவேண்டும். அன்றாடப் பசியைத் தணிப்பதற்கு வழிசெய்யும் வசதியான

வாழ்க்கை முறைகள் வகுக்கப் பெறவேண்டும். வசதியான வாழ்வுக்கு இன்றியமையாத பொருளாதார சமத்துவம் நாட்டிலே அமைக்கப்படுதல் அவசியம். இன்றைய வாழ்க்கை, தேவைப் பூர்த்தி, இன்பம் இவற்றைப்பற்றி கவலைப்படவேண்டிய நேரத்தில், உழைப்பாளியின் உரிமைகள், சுகவாழ்வு பொருளாதாரம் இவைபற்றித் திட்டமிடவேண்டிய நேரத்தில் கடவுளைப்பற்றி கவலைப்பட்டுக்கொண்டிருக்க நேரம் கிடையாது.

நம்மைப்பற்றி, நமது வாழ்க்கை அமைப்பைப் பற்றி நமது நிகழ்காலம், எதிர்காலம் எல்லாவற்றையும் நிர்ணயிக்கிற பிரச்னைகளைப்பற்றி நாம்தான் முடிவுகட்டியாகவேண்டும். 'நடப்பது நடக்கத்தான் செய்யும். எல்லாம் கடவுள் செயல். எல்லாம் நன்மைக்கே' என்று கையாலாகாத வேதாந்தம் இன்று தேவையில்லை. மக்களின் பிரச்னைகளுக்கு மக்கள் தான் விடை கண்டாகவேண்டும். கடவுள் என்கிற புதிருக்கு விடை காணவேண்டிய அவசியமில்லை. விடைகண்டு ஆகப்போகிறதுமில்லை. ஆகவே, கடவுளை (ஒரு பதார்த்தம் இருந்தால்) இருக்கிற இடத்திலேயே இருக்க விட்டு விட்டு, நமது வழியில் முன்னேறவேண்டும். ஆகையால் கடவுளைப்பற்றி கவலைப்படு, மோட்ச லோகத்தில் 'ஸீட் ரிசர்வ்' பண்ண இப்பொழுதே புரோகிதர்களைப் பிடித்து ஆவன செய் என்று வீணத்தனம் பண்ணுகிற புரோகிதத்துக்கு சாவுமணி அடித்துவிடவேண்டும்.

உழைப்பவர்களுக்கு விரோதமாக உழைப்பவர்களிடையே புல்லுருவிகளும், கருங்காலிகளும் தலை தூக்கித் தறுதலைத்தனம் செய்வதும் மனித முன்னேற்றத்தை அரிக்கின்ற வியாதியாகும். இந்தப் பண்புகளும் ஒழிந்தாக வேண்டும்.

இவையெல்லாம் அனுபவசாத்தியமாக வேண்டுமானால்—அரசியல், சமூகம், பொருளாதாரம் அனைத்திலும் நேர்மையும் உயர்வும் திகழ வேண்டுமானால் அறிவு விசாலமாக வேண்டும்.

பசியும், ஏழ்மையும், அறியாமையும், உரிமையின்மையும், இதுபோன்ற இழிதகைமைகள் எல்லாம் ஒழிக்கப்பட அரசியல் விடுதலை தேவை; சமூக சீர்திருத்தம் தேவை; பொருளாதார சமத்துவம் தேவை இவை நிலைத்து நின்று நல்ல பலனை அளிக்க அறிவின் பெருக்கம் தேவை.

மக்களிடையே சிந்தனைப் பொன்வெளி பரவ வேண்டும். அதற்கு இலக்கியம் துணைபுரியமுடியும்.

ஆனால், பசி, தரித்திரம், அடிமைத்தனம் இவற்றிடையே முதுகெலும்பற்ற புழுக்களாய், பூச்சிகளாய் உழல்கின்ற சாதாரண மக்கள் அடிப்படை கல்விக்குக் கூட வசதியற்று உழைப்பிலே சாகிறார்கள். சின்னஞ் சிறுவர்களைக் கூட முட்டாள்களாக்கி உழைப்பிலே ஈடுபடுத்த வேண்டிய நிலையில்தான் உள்ளனர். கல்வி கற்பதற்கு உரிய வசதிகளும் காலமும் பெரும்பாலானவர்களுக்கு 'இல்லை' என்றாகி விட்டது. அதனால்தான் அறியாமை அந்தகாரம் உலகெங்கும் கவிந்திருக்கிறது. அதனால் தான் இன்னும் விடியவில்லை! புதுயுக உதயத்தின் ஒளி தெரியவில்லை.

இருள் நீங்கி ஒளிபெறவேண்டுமானால், அடியுங்கள் சாவுமணி —

சோம்பலின் தொண்டர்களுக்கு.

ஏழ்மைக்கு, பசிக்கு, தரித்திரத்துக்கு, அடிமைத் தனத்துக்கு அறியாமை அந்தகாரத்துக்கு, மதத் துக்கு, மடத்தனத்துக்கு, பண மூட்டைகளுக்கு, புல் லுருவிகளுக்கு, கருங்காலிகளுக்கு, சுரண்டும் கும்ப லுக்கு, சுயநலத்துக்கு.

மனிதரை மனிதராக வாழ விடாத அனைத்துக் கும் அடியுங்கள் சாவுமணி!

சிந்தனை எங்கும் பரவட்டும்.

சிந்தனையின் செந்தீ திக்கெலாம் அறிவுச்சுடர் பரப்பி, ஒளிகாட்டட்டும்.

உயிர்க்குலச் சிறுமைகள் ஒழியட்டும்.

ஒழியட்டும்! அழியட்டும்!

அடியுங்கள் சாவுமணி!

விழித்தெழுந்து வீறுகொண்டு உரிமைகளைப் பெறுவோம் என உறுதிகொண்டு உழையுங்கள். முன்னேறுங்கள்!

---


படவுலகில் கடவுளர்கள் படும் பாட்டை விளக்கிய

ஸ்ரீகாரநாதன்

மீண்டும் எரிமலை அனல் பொறி சிதறுகிறார்

படவுலகின் மீது!

விரைவில் வெளிவரும்

சினிமாவில் அப்பாவிகள்!

இது எரிமலைப் பதிப்பக வெளியீடு


---

# 6

உழைப்போர் உயர, அவர்கள் தங்கள் உரிமைகளைப் பெற, தங்களைத் தாங்களே உணர்ந்து வாழ்க்கை வசதிகளை அடைவதற்காக, அவர்களின் அறிவு வளர வேண்டியது அவசியம்.

ஆனால் இன்று மக்களுக்கு அறிவுபுகட்டும் சாதனங்கள் எல்லாம் மக்களை மடையர்களாக வைத்துத் தாம் வாழவேண்டும் என எண்ணுவோர் ஆதிக்கத்திலேயே உள்ளன. வேண்டிய அவகாசமும் அவர்களிடமே இருக்கின்றன. ஏராளமான பணம் இருப்பதனால்.

உழைப்பவர்கள் தங்கள் அன்றாடத்தேவைகளுக்கு உரிய பொருள் பெறவே, நாள் முழுதும் கூலிக்கு உழைக்க வேண்டியதாகிறது. கிடைக்கின்ற காசும் கொஞ்சமே. உழைப்பின் அலுப்பைத் தீர்க்கவே ஓய்வு போதவில்லை என்ற நிலை போக, அறிவுப் பசியைத் தணிக்க உதவும் விருந்துகளுக்கோ கொள்ளைகொள்ளையாகத் தான் கொட்டியழ வேண்டியிருக்கிறது.

மலிவாக கிடைக்க வழி செய்கிறார்கள் முதலாளி என்றால், அவை தங்கள்பணப் பெருக்கத்தைக் கருதி மக்களின் கீழ்த்தர உணர்ச்சிகளைப் பயன்படுத்தி லாபம் சம்பாதிக்கும் நோக்கமுடையனவாகத் தான் உள்ளன.

இன்றைய சினிமாக்களை கவனியுங்கள். பொது ஜனத்துக்கு இது தான் பிடிக்கும், இவை தான் புரியும்; மக்கள் இவை தவிர வேறு எதையும் விரும்ப மாட்டார்கள் என்று சொல்லி குப்பைப் படங்களையே தயாரித்துக் கொட்டுகிறார்கள், காலத்துக்கேற்ற கருத்துக்களையோ, கதைகளையோ படமாக்குவதில்லை.

ஏன்? பணம்படைத்தோர் வியாபார நோக்கிலே படவுலகில் திரிவதால்.

பத்திரிகைகள் எல்லாம் ஒரே கட்சியின் எண்ணங்களைப் பரப்புகிற பிரசார நோட்டீஸ்களாக இருக்கின்றன. ஒரே முதலாளி பல பத்திரிகைகள் நடத்தத் துடிக்கிறார். வியாபார வெற்றிபெறத்தவிப்பு இருக்கிறதே தவிர, எதையாவது அச்சிட்டு பகட்டான அட்டை போட்டு, அனுப்பிவிட்டால் விற்றுவிடும் என்கிற 'பிஸினஸ் முறையில்' செயல் புரிய அரும்பாடுபடுகிறார்களே தவிர மக்களின் அறிவை அபிவிருத்தி செய்ய உழைக்கவில்லை.

அறிவின் களஞ்சியங்களான புத்தகங்களை வெளியிட விரும்புவதில்லை. எது சுலபமாக விற்பனையாகுமோ, எந்தக் கருத்துக்கு எக் காலத்தில் மதிப்பு இருக்குமோ, அந்தச்சமயத்திலே அவற்றைப் புத்தகங்களாக்கி சாதாரண வாசகன் பணம் கொடுத்து வாங்க முடியாத அளவுக்கு விலையை உயர்த்தி வைத்துக் கொள்ளையடிக்க ஆசைப்படுகிறார்கள். மலிவுப்பிரசுரங்கள் போடமனம் இல்லை. அறிவு நூல்களை மலிவாகப் பிரசுரிக்க விரும்புவோரை ஒடுக்கிவிட, பெரும் பணக்காரர்கள் ஒன்றுபட்டு கூட்டுக்கொள்ளை லாபத் திட்டம் தயாரிக்க வேண்டும் என்று தவிக்கிறார்கள், எல்லாம் பணத்தோடு பணம் சேர்க்கும் முயற்சி தான்!

கல்வியும் ஆராய்ச்சிப் படிப்பும் பெற பணக்கார வீட்டுப் பையன்களுக்கே வசதிகள் இருக்கின்றன. பணமும் ஓய்வும் அவர்களுக்குத் தான் உள்ளன. உழைப்பவர்களின் குழந்தைகள் ஆரம்பப் பாடங்கள் கற்கக்கூட பள்ளிக்கூடம் போக இயலாத நிலையே நீடிக்கிறது. படிக்க வைப்பதைவிட பையனை ஏதாவது 'சிற்றாள் வேலை'க்கு அனுப்பினால் ஏதோ

கொஞ்சம் காசுவரும் என்ற அல்ப ஆசையை பல வாக வளர்க்கிறது பொருளாதாரம் பெற்றோர்களின் மனதிலே. அதனல் மனித சமுதாயத்தின் பெரும் பாலோரது வாழ்வு பாழாகிறது, அறிவுக்கு இருட் டடிக்கப்படுகிறது.

இதை உணராதவர்கள் பலர். உணர்கிறவர் களும் உண்டு. இருந்தாலும் மாற்றுக் காண சமு தாய அமைப்பு முறை இன்று இடம் தரவில்லை!

வாழ்வின் ஒவ்வொரு துறையிலும், மனிதகுலத் தின் பெரும்பகுதியினர் ஒடுங்கி ஒடுங்கி அடிப்படி யிலே நின்றுவிடத் தான் வழிகாட்டுகிறது சமுதாய அமைப்பும், பொருளாதாரமும் பிறவும்.

இவை மாற வேண்டும், இன்றைய தர்மம் மாண்டு மடியவேண்டும்; பொருளாதார அநியாயங் கள் மண்ணாகவேண்டும்; அரசியல் தகிடுதத்தங்கள் அழிக்கப்பட வேண்டும் — இப்படி அறிஞர்கள் எவ் வளவோ காலமாகச் சிந்தித்தும் எழுதியும் பேசியும் வந்திருக்கிறார்கள்: வருகிறார்கள்; வருவார்கள்.

ஒரு சில அறிஞர்கள் மட்டும் குமுறிக்குமைந்து அனல் கக்கிவிடுவதனாலே ஒன்றும் செய்துவிட முடி யாது தான்.

ஆனல் எதுவும் விளையாது என்று சொல்லிவிட முடியாது.

ஒரு இடத்திலே வைக்கும் பொறி, தீயாகி எங் கும் பரவுகிற பெரு நெருப்பாக மாறுவது போல, ஒரு சில அறிஞர்கள் சமுதாயத்திலே சிதறிவருகிற சிந்தனைக்கனல் பொறிகள் மக்களின் உள்ளத்திலே வேலைசெய்யும். அறிவுத் தீ குதித்துப் பெருகும்.

பலரது எண்ணங்களும் எழுத்தும் சொல்லும் அறிவுக் கனலை எங்கும் பரப்பவேண்டும். ஒவ்

வொரு மனிதனுள்ளும் தூங்குகிற அறிவுப்பொறியை ஒளியுறுத்தும் சுடராக அறிஞர்களின் சிந்தனை பயன்படுமானால், திக்கெட்டும் தீ பரவும். அறிவுத் தீ சிந்தனைச் செந்நாக்குகள் நீட்டி சமுதாயத்தின் இழிநிலையைச் சுட்டெரிக்கும் திட்டம் காண வழி காட்டும்.

தங்கள் குறைகளை உணர ஒளிகாட்டும். தவறுகளை நீக்கி நிறைவுகள் பெற, வஞ்சிக்கப்பட்டிருக்கும் உரிமைகளைப் பெற வகைகாட்டும்.

அறிவுத் தீ எங்கும் பரவவேண்டும். அந்தகாரம் ஒழிய வேண்டும்.

அறிவு அந்தகாரத்திலே ஆட்சிபுரிய விரும்புகிற கரும்பூதங்களுக்குச் சாவுமணி அடிக்க வேண்டும். மக்களின் உழைப்பை ஏற்றுக்கொண்டு, வாழ வசதிகள் கொடுக்க விரும்பாத பணமூட்டைகளுக்கு ஜமீன்தார்களுக்கு, சமஸ்தானாதிபதிகளுக்கு, ஆளும் ஆசைபற்றிய எல்லோருக்குமே சாவுமணி அடித்தாக வேண்டும். அறியாமையை வளர்க்கிற போலித்தனமான கலைஞர்கள், அறிஞர்கள், சந்தர்ப்பவாதிகள், மதவாதிகள் எல்லோருக்குமே சாவுமணி அடித்தாக வேண்டும்.

அந்தச் சுயநலவாதிகளுக்கும், பிற்போக்குக் கும்பல்களுக்கும் அறிவு அந்தகாரம், சமூக மடைமைகள், பொருளாதார பேதங்கள் அனைத்துக்கும் அடிக்கப்படுகிற சாவுமணி தான் புதுயுக உதயத்தை வரவேற்க ஆர்க்கின்ற மங்கள மணியொலியாகும்.

அது ஒலிக்கப் போவது என்று? எப்போது?

## சிறந்த சிந்தனை நூல்

தயாராகிறது

•

# மதம் அவசியமா?

ஆசிரியர் : அசோகன்

•

'மதம் மக்களுக்கு அபின்' என்றான் பேரறிஞன். மதம் மக்கள் நிலையை உயர்த்துகிறதா, தாழ்த்துகிறதா ? இன்றைய மக்களின் போக்கு எப்படி இருக்கிறது ? மதம் தேவைதானா? இவை போன்ற பிரச்னைகளை ஆராயும் நூல்

•

இது ஒரு 'சாந்தி நிலைய' வெளியீடு

COVER PRINTED AT JOTHI PRESS, MADRAS. 5.